
மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.





இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 22


- கர்த்தர் பேசுகிறார் - நீங்கள் கேட்கிறீர்களா ?
- முதல் நூற்றாண்டு கிறிஸ்துவம்
- கிறிஸ்தவன் மற்றும் போர்
- பாவத்தை தவிர்த்தல்
- என் வாழ்க்கையை மாற்றிய அந்த நாட்கள் சகேயு

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.


ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info


வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation


இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk


இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமுட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.


### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.


*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# கர்த்தர் பேசுகிறார் - நீங்கள் கேட்கிறீர்களா ?

இயேசுகிறிஸ்துவின் உவமைகளில் மிக முக்கியமான ஒரு உவமை "விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்" என்பது பற்றியதுதான்.

இந்த உவமையின் முடிவு வேறுபட்டதாயிருக்கிறது. ஏனெனில், எல்லா விதைகளும் நல்ல நிலத்தில் விழுந்து நல்ல கனிகளை கொடுப்பதாக இல்லை.

சில விதைகள் வழியருகே விழுந்தன. பறவைகள் வந்து அதை பட்சித்துப் போட்டது. சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது. மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோது தீய்ந்துப்போய் வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று.



சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தன. முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது.

முடிவில், சில விளைச்சலை தந்தது. ஏனென்றால், அது நல்ல ஆழமான நிலத்திலே, விதைகள் முற்றிலும் நன்றாக விளைய ஏதுவான நிலத்திலே விழுந்தன. பலன் கொடுத்தது.

### உவமையின் அர்த்தம்

இயேசுகிறிஸ்து, இந்த உவமையின் அர்த்தத்தை விளக்கமாக கூறியுள்ளார். விதை ராஜ்ஜியத்தின் வசனத்தை குறிக்கின்றது. பலவிதமான நிலங்கள், வசனத்தை கேட்கின்ற ஜனங்களின் இதயத்தை குறிக்கின்றன.

சிலர் வசனத்தை கேட்டு உணராதிருந்து, இருதயத்திலிருந்து தள்ளி விடுகின்றனர்.

சிலர் வசனத்தை கேட்டு சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு தங்கள் ஈடுபாடு அதில் இல்லாததினால் நிலைத்திருப்பதில்லை.

சிலர் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டபோது உலகத்தின் உபத்திரவம், துன்பம், மற்றும உலகக் கவலையும் ஐசுவரிய மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால் பலனில்லாமல் போகின்றனர்.

முடிவில், சிலர் வசனத்தை கேட்டு, உணர்ந்து பலன் கொடுக்கிறவர்களாயிருக்கின்றனர்.

### உங்கள் காதுகளை பயன்படுத்துங்கள்

இந்த உவமையை சொன்ன பிறகு இயேசு உடனடியாக "கேட்கிறதற்குக்

*காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்'' (மத்தையு 13:9).* இதின் அர்த்தம் என்னவென்று நினைக்கிறீர்கள்? *"ஜாக்கிரதையாய் கேளுங்கள்"* என்பதைவிட ஒருபடி மேலாக சொல்கிறார். அந்த உவமையின் அர்த்தம், நாம் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை கேட்பதோடல்லாமல், அதின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதின்படி செய்யவேண்டும் என்று தெளிவாக விளங்குகின்றது.



இப்படியிருக்க நாம் எப்படிப்பட்ட நிலத்திற்கு சமமாயிருக்கிறோம்? *''கேளாதவர்போல் இருப்போர் யாவரும் செவிடர் இல்லை''* என்று ஒரு பழமொழி உண்டு இந்த செய்தியை படிப்பவர்கள் யாவரும் இப்படியில்லாமல், நீங்கள் எப்படிப்பட்ட நிலத்தைப் போல் இருக்கிறீர்கள்? இந்த வாக்கியங்கள் ஒரு காதில் விழுந்து மறு காதில் சென்றுவிடுவது போல் உள்ளதா? கர்த்தருடைய வார்தைகள் உங்கள் செவிகளில் விழாதவண்ணம் அதிக அனாவசியமான குழப்பங்கள் நிறைந்ததாக உங்கள் வாழ்க்கை உள்ளதா? இதை நீங்கள் கவனமாக நேரமெடுத்து, சிந்தித்து இதன் முக்கியத்துவத்தை உணருகிறீர்கள் என நம்புகிறேன்.

### கர்த்தரின் குரல்

இந்த செய்தியின் மூலக்கருத்து பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை. நாம் கர்த்தருடைய வார்தைகளை கேட்கும்படியாக நம் செவிகளை திறப்போம். *''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது.''* என்று அப்போஸ்தலனாகிய பவுல் 2 தீமோத்தேயு 3:16ல் சொல்லியிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பேதுருவும் கர்த்தரின் வாத்தைகளைக் குறித்து இப்படியாக சொல்லியிருக்கிறார். *".......தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்''* என்று 2 பேதுரு 1:21ல் கூறியுள்ளார். வேதாகமத்தில் சொல்லப்பட்ட அனைத்தும் தேவனால் சொல்லப்பட்டு தேவ மனிதர்களால் எழுதப்பட்டன என அறிகிறோம். ஆகையால், உண்மையாகவே வேதாகமத்தை வாசிக்கும்போது நாம், தேவன் நம்மோடு கூட பேசுகிறதை கேட்கிறோம்.

### பலன் கொடுப்பது

விதைக்கிறவனுடைய உவமையை பற்றி நாம் திரும்பி பார்ப்போமென்றால், நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளைக் குறித்து லூக்கா இப்படியாக கூறியுள்ளார். *"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தை கேட்டு, அதை உண்மையும், நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்'' - லூக்கா 8:15*



இந்த உவமையில் ஒரு விதை முப்பதும், அறுபதும் நூறுமாக பலன் கொடுக்கின்றது என பார்க்கிறோம். இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்ளவேண்டும் என இயேசு எதிர்பார்க்கிறார்? இது எதைக் குறிக்கிறது? இந்த உவமை வேத வசனத்தைக்கேட்கிற அநேக ஜனங்களின் பிரதிறத்தை குறிக்கிறது. வேதவசனங்களை கேட்டு கீழ்ப்படிந்து ஜீவிப்பதைவிட மாறுபட்ட ஜீவியம் உடையவர்கள் இருக்கின்றனர். மக்கள் வேறுப்பட்டவர்கள். கர்த்தர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார். ஒரு வார்த்தையில் சொல்லப்போனால், கர்த்தர் நாம் விசுவாசித்தில் வளர்ச்சியடையும்படி எதிர்ப்பார்க்கிறார். *''விசுவாசம் கேட்கிறதனால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17).*

### விசுவாச வாழ்க்கை வாழ்வது

*"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" எபிரேயா 11:1.* இந்த வசனத்தில் *"உறுதி" மற்றும் "நிச்சயம்"* என்ற வார்த்தைகளை கவனிப்போம்.

நமக்கு ஒரு அடிப்படையான புரிந்துக்கொள்ளுதல் இல்லாவிட்டால் இப்படிப்பட்ட விசுவாசம் இருக்காது. நாம் கர்த்தரைப் பற்றி ஒரு மேலோட்டமான, அற்ப அறிவு உள்ளவர்களாய் இருந்தால் இப்படிப்பட்ட விசுவாசத்தை அடையமுடியாது. நமக்குள் அவருடைய வார்த்தை *"வேரூன்றி"* நம் மனதிலும் எண்ணத்திலும் ஊடுருவி செல்ல வேண்டும். இயேசுவுக்குள் விசுவாச வாழ்க்கை ஒரு நல்ல ஆரோக்கியமான விளைச்சல் உள்ள வாழ்க்கையாக இருக்கும். எபிரேயர் 11ம் அதிகாரத்தில் விசுவாச வாழ்க்கை வாழ்ந்த விசுவாச வீரர்களையும், வீராங்கனைகளையும் பற்றியும் உள்ளது. கர்த்தர், சொன்ன வார்த்தைகளை கேட்டார்கள், விசுவாசித்தார்கள், விசுவாசத்தோடு வாழ்ந்தார்கள்.

### அறுவடையின் முடிவு

விசுவாச வீரர்களின் வாழ்க்கைகளை நாம் வேதத்தில் வாசிக்கும்போது, அவர்கள் தினமும் கடவுளை அறிந்து, ஆச்சரியமான எதிர்க்காலத்தை நோக்கிப் பார்த்தவர்களாய் ஜீவித்தனர். அவர்களுக்குள் தேவனின் வார்த்தை வேரூன்றி, அதிக பலன் கொடுத்து, நித்தியமான தேவனின் ராஜ்யத்தில் பங்கடையும் படியாய் வாழ்ந்தனர்.

இவை, நம் வாழ்க்கைக்கும், ஒரு உறுதியும், நிச்சயமுமாய் இருக்கவேண்டும். *"இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். அவர்கள் நம்மையெல்லாம் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நிருபித்திருக்கிறார்கள்" (எபிரேயர் 11:39-40).*

நாம் ஞானமுள்ளவர்களாய் உண்மையாக இந்த சத்தியத்திற்கு நம் முழு கவனம் செலுத்துவோம். இயேசு சொன்னபடி *''கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்''.*

**- டேவிட் ஒக்டென்**

# முதல் நூற்றாண்டு கிறிஸ்துவம்

தேவனுடைய ராஜ்யம் என்பது முதலாம் நூற்றாண்டின் முக்கிய விஷயமாய் இருந்தது. இயேசு கிறிஸ்து எப்பொழுதும் “தேவனுடைய ராஜ்யம் இவ்விதமாக....” என அனேக உவமைகள் மூலமாக பேசியுள்ளார்.


இயேசு கிறிஸ்து பரத்திற்கு ஏறுவதற்கு முன்பாக சுமார் ஆறு வாரங்கள் சீஷர்களுக்கு. தரிசனமாகி ‘‘தேவனுடைய ராஜ்யத்திற்கடுத்தவர்களை பேசியிருந்தும்’’ (அப்போஸ்தலர் 1:3), சீஷர்களால் கடைசியாக கேட்கப்பட்ட கேள்வியும் தேவனுடைய ராஜ்யத்தை பற்றித்தான்.



சீஷர்கள் பெத்தானியாவில் நடந்து போனபோது இயேசுவை கேட்ட கேள்வியிலிருந்து எப்படிப்பட்ட உபதேசம் பண்ணினார் என தெளிவாக விளங்குகிறது. *“அப்பொழுது கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி, ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலருக்குத் திரும்ப கொடுப்பீர் என்று கேட்டார்கள்” (அப்போஸ்தலர் 1:6)* இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்கு திருஷ்டாந்தமாக பழைய ஏற்பாட்டில் இயேசுவின் மரணத்தையும், உயிர்தெழுதலையும் குறித்து சொல்லப்பட்டவைகளை விளக்கினார். *(1கொரிந்தியர் 15:3,4 வசனங்களை பார்க்கவும்).* மற்றும் இஸ்ரவேலை நிலைநிறுத்தும்படி, தாம் ராஜாதி ராஜாவாய் பூமியிலே அரசாள வரப்போகிறார் என்பதையும் அறிவித்தார்.

அவர் மாறுத்தரமாக சொன்னவைகளை பார்க்கும்போது, சீஷர்கள் புரிந்துக்கொள்ளாமல் கேட்டதைக் குறித்து கோபப்படாமல் அவர் அவருடைய வருகையை குறித்து *“பிதாவனவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல”* என்று அப்போஸ்தலர் 1:7ல் சொல்லியிருக்கிறார். அதுவரையிலும், அவர்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.






**இஸ்ரவேலரின் நம்பிக்கை**

எருசலேம் தேவனுடைய பட்டணம் என்றும், தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் மறுபடியும் திரும்பி வருவார்கள் என்கின்ற காரியம் போன்ற அதிகாரங்களில் முக்கியமாக சொல்லப்பட்டிருக்கிற இரட்சிப்பின் சுவிசேஷமாய் இருக்கிறது. (அப்போஸ்தலர் 26:7, 28:20 மற்றும் ரோமர் 11). அழிவிலிருந்து காக்கப்பட்ட தேவ ஜனங்களுக்கு எருசலேமின் ராஜாவின் வருகை மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக இருக்கும். ஏன் என்றால் அது தான் உலகத்தின் நித்திய வாசஸ்தலமாக இருக்கும்.

இக்காலத்தில் அஞ்ஞானிகளும், புராணக் கதைகளை அறிந்தவர்களும் உண்மையான கிறிஸ்துவ விசுவாசத்தைப் பற்றி தவறான கருத்து உள்ளவர்களாக இருக்கின்றனர். இயேசுவின் வாக்குத்தத்தங்களை குறைவு படுத்தும்படியால் மரணமற்ற மனித வாழ்க்கையும் எதிர்கால பரலோகத்தின் பிரஜைகள் / சுதந்திரவாளிகள் என்றும் தங்களை நினைக்கின்றனர்.

பாவமும், மரணமும் அழிக்க வல்லது. இவற்றைக்குறித்து நாம் சொல்லாவிட்டால் அது நம்மை முற்றிலும் அழிக்க வல்லது. என்று (லூக்கா 13:1-5; யோவான் 3:15,16)ல் சொல்லப்பட்டுள்ளது.

*“சாந்த குணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்”* (மத்தேயு 5:5) என்பது இயேசுவின் இரட்சிப்பிலும், எருசலேம் *“மகாராஜாவின் நகரம்”* என்று (மத்தேயு 5:35)ல் சொல்லப்பட்டுள்ளது.

## உயிர்த்தெழுதலின் நம்பிக்கை

முதலாவது, இந்த உலகம் தோற்கடிக்கப்பட்டு, பின்பு இயேசுவானவர் எருசலேமில் ராஜாவாக மகிமைப்படுத்தப்படும்போது இந்த உலகம் புதியதும் உயிர்ப்பிக்கப்பட்டதுமாய் இருக்கும். இயேசுவின் வருகைக்கு முன்பு கலங்கியிருந்த ஆண்களும், பெண்களும் சமாதானமாய் ஒற்றுமையாய் இருப்பர். வறண்ட நிலங்கள் செழிப்பாகும். அநீதி அழிந்து நீதி நிலைநிறுத்தப்படும், கொடுமையானவர்கள் அழிக்கப்படுவர். எருசலேமில் மறுபடியும் ஆராதனையுடன் புதிய மார்க்கம் நிலைநிறுத்தப்படும். இயேசுவின் வருகையில், கர்த்தரை உண்மையாய் பின்பற்றினவர்கள் அழியாமையை தரித்துக் கொள்வர். அவர்கள் உதவியாளர்களாகவும், வேலையாட்களுமாய், பூமியெங்கும் பரம்பி நிற்பர். புதிய நகரமாகிய எருசலேமில் இருப்பர். முடிவிலே *"பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்"* என்று எண்ணாகமம் 14:21ல் சொல்லப்பட்டது போல் இருக்கும். மற்றும் சங்கீதம் 72:19, ஆபகூக் 2:14ல் சொல்லப்பட்டுள்ளது.



இவை எப்படி நிறைவேறும்? இயேசுகிறிஸ்து வெளிப்படும்போதும், தேவதூதர்களோடு பரலோகத்திலிருந்து இறங்கி வரும்போதும் இப்படி ஆகும் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. தானியேல் 12:2ன்படி *"பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பர்''* என்று சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய நியாயத் தீர்ப்புக்கென்று எழுந்திருப்பர். தேவனுடைய ராஜ்யத்திற்கு பாத்திரவான்கள் அழியாமையை தரித்துக் கொள்வார்கள். மற்றவர்கள் நித்திய அழிவுக்காக பூமிக்கு அனுப்பப்படுவர். பூமியிலே ஜீவனோடு இருப்பவர், இயேசுவின் வருகையின்போது அழிவுக்கேதுவான சரீரம் மறுரூபமாக்கப்பட்டு அழிவாமையையும், மகிமையுமான சரீரத்தை தரித்துக்கொள்வர் (1கொரிந்தியர் 15:50-57, மற்றும் பிலிப்பியர் 3:20-21 வசனங்களை பார்க்கவும்)



## ஒரு உண்மையான விசுவாசம்

இப்படிப்பட்ட கருத்துக்கள் முதலாம் நூற்றாண்டில் ஆதி அப்போஸ்தலரால் போதிக்கப்பட்ட இரட்சிப்புக்கேதுவான ஒரு பகுதியாகும். இந்த ஒரே சத்தியத்திலே நிலைத்து நிற்பது நாம் இரட்சிக்கப்பட அவசியமாய் இருக்கிறது. மனிதனின் தவறான கருத்துக்கள் தவறான வழியில் நடத்தும், வேதாகமத்தில் ஒரே ஒரு உண்மை முக்கியப்படுத்தபட்டிருக்கின்றது. *''உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறார்''* (எபேசியர் 4:4-6)

நம்முடைய விசுவாசம் மனிதனால் உருவாக்கப்பட்டதால் இல்லாமல், வேதத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும். நமக்காக தேவனாலும், குமாரனாகிய கிறிஸ்துவினாலும் ஏற்படுத்தப்பட்ட இரட்சிப்பைக் குறித்து நாம் தெளிவுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

## விசுவாசமும் ஞானஸ்நானமும்

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் என்று சொல்லியிருக்கிறார். இயேசுவால் போதிக்கப்பட்ட காரியங்களில் இவை ஒரு முக்கிய அம்சமாகவும், அப்பியாசமாகவும் இருந்தது.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு இயேசுவின் கட்டளையாக *"பின்பு அவர் அவர்களை நோக்கி, நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்".*

இப்படியாக அப்போஸ்தலர்கள் பிராயணப்பட்டு, ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் கடந்து சென்று, கிறிஸ்துவின் போதனைகளையும் ஞானஸ்நானம் பெறுவதைக்குறித்தும் போதித்தனர் என்று அப்போஸ்தலர் நடபடிகளில் எழுதியிருக்கிறது. பழைய வாழ்க்கையை மாற்றி புதிய வாழ்க்கையை கிறிஸ்துவுக்குள் பெற்று, ஜீவிப்பது கர்த்தருடைய வழியின் அடையாளமாய் உள்ளது. இது நமக்கும் கொடுக்கப்பட்ட தருணம்.

இயேசுவை ஏற்றுக்கொண்டு ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளாகிய வேதத்தை படித்து புரிந்துக்கொண்டு நடப்போம். அது நம்மை முற்றிலும் மாற்றி ஒரு புதிய நம்பிக்கையை கொடுத்து, நிகழ் காலத்திற்காய் மாத்திரமல்ல, வருங்காலத்திற்கும் பிரயோஜனமானதாய் இருக்கும்.

# கிறிஸ்தவன் மற்றும் போர்

தினசரி செய்திகளில் போரின் புகைமண்டலம் குறித்து தவறாமல் படிக்கிறோம். இச்சூழ்நிலையில் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனின் மனப் போக்கு எவ்விதமாக இருக்க வேண்டும்? ஒருவன் தனது நாட்டுக்காகப் போரில் ஈடுபடலாமா? ஒருவன் தனது அரசாங்கத்து விதிகளைப் பின் பற்ற வேண்டுமா? இவற்றைக் குறித்து வேதாகமம் கூறுவதை J.B நாரிஸ் ஆய்வு செய்கிறார்.

வேதாகமம் மற்றும் சரித்திர பூர்வ ஆய்வு

இக்ரைமீயன் அமெரிக்க யுத்தங்களுக்குப் பின்னர் ஆங்கிலேயர் சுமார் அரை நூற்றாண்டுக்கு எந்த போராட்டமுமின்றி கடந்து சென்றனர். 1914ம் ஆண்டுக்குப் பின்னர், ஜனங்கள் ஏற்கனவே நடந்திருந்த இரு உலக மகாயுத்தங்களின் பாதிப்பை மனதில் கொண்டிருந்தனர். இப்படிப்பட்டதோர் மூன்றாம் போர் மூண்டு, பேரழிவுக்குரிய ஆயுதங்களை உருவாக்குகிறதில் தீவிரமும், சகிப்புத்தன்மையும், உறுதியும் இருப்பதைக் கண்டு வருகிறோம்.

ஒரு தேசம் சடிதியாய் ஆபத்தைச் சந்திக்கிறது. அப்போது ஒரு கிறிஸ்தவனின் கடமை என்ன? அவன் தனது தேசத்தை பாது காக்க எடுக்க வேண்டிய சகல முயற்சிகளிலும் பங்கெடுக்க வேண்டுமா, அல்லது சோதனை காலத்தில் விலகி நிற்பதா? இதில் என்ன செய்ய வேண்டும் என்பதையும், அதற்குப் பின்பு வெட்கமின்றி தேவனையும் தனது சக மனிதர்களையும் சந்திப்பது பற்றி புதிய ஏற்பாடு எதைக் கூறுகிறது?

நாம் வாசிக்கும் இந்தப் பகுதிகள் மூலம் இயேசுகிறிஸ்துவும் அவரது சீஷர்களும் இந்தப் பிரச்சனைகளைக் குறித்துப் போதித்தவற்றை அறிவோம். இதைக் கொண்டு கி.பி. முதல் நான்கு நூற்றாண்டுகளில் திருச்சபை சந்தித்த போர் முனை அநுபவங்களை ஆராய்வோம்.

## இரு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது.

கர்த்தருடைய போதனையில் முதல் குறிப்பு இது: இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. (மத்தேயு 6:24).

நவீன உலகப்பணிகளில் சிலகுறிப்பிட்ட விதிமுறைகளுக்கு ஒருவன் கட்டுப்படுகிறான். ஒரு தொழிலாளி தனது பணியை வேண்டாம் என்றால் உதறித் தள்ளமுடிகிறது. நாம் பேசும் பொருளில் இப்படிப்பட்ட நோக்கம் மூன்று



காரணங்களுக்காக அடங்காது.

1. ஆதி காலங்களில், ஆதி கிறிஸ்தவ நூற்றாண்டுகளில், அடிமைத்தனம் என்பது பரவலாக வியாபித்திருந்த ஒரு பழக்கமாயிருந்தது. ஒரு அடிமை தனது எஜமானுக்கு முழுவதும் கட்டுப்பட்டிருந்தான். இந்த வேதவாக்கியத்தில் குறிப்பிட்ட நிலைமை அதற்கு நன்றாகப் பொருந்தும். ‘இரு எஜமான்களுக்கு அடிமையாக இருக்க ஒருவனாலும் கூடாது.’ எந்த அடிமையாலும் இரண்டு எஜமான்களுக்கு ஒரே வேளையில் கீழ்ப்படிய முடியாது. கொஞ்ச காலத்துக்குச் சமாளிக்கலாம் என்றாலும், ஒரு மோதல் வந்தே தீரும்.

2. ஒரு விசுவாசி இயேசுகிறிஸ்துவுக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்திருக்கும்படி வாக்கு கொடுத்துள்ளான். தன்னிலுள்ள பலவிதமான பலவீனங்களினிமித்தம் அதைக் காப்பாற்ற முடியாமல் போகிறான். தனது பலவீனத்தைப் பயன்படுத்தி, ஒரு கட்டத்தில் கர்த்தரைக் தள்ளி விடுகிற ஒரு நிலையை எட்டிவிடும்போது, அவன் கீழ்ப்படியாமல், உண்மையான சேவைக்குத் தகுதியற்றவனாகிறான். ஒரு கிறிஸ்தவனிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிற ஊழியம் முழுமையானது. அவன் பிறருக்குத் தனது சேவையின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோத் திருப்பிவிட அதிகாரம் அவனுக்கில்லை.

3. ராணுவ சேவையில் நவீனகாலத்து முறைப்படி ஆயுதம் ஏந்தினாலும் அலுவலகப் பணியில் ஈடுபட்டாலும், அதிலும் முழுமையான ஈடுபாடு எதிர்பார்க்கப் படுகிறது. கீழ்ப்படிதல் என்பது எந்த நிமிஷத்திலும் உடனடியாகவும் முழுமையாகவும் எதிர்பார்க்கப்படுகிறது. ராணுவ சேவையைப் பொறுத்தமட்டில் வேறு எஜமான்களுக்குச் சேவை செய்வது எவ்வாறு கூடாததோ, அப்படியே தான் இயேசுகிறிஸ்துவின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். ராணுவ சேவை இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளைவிட வித்தியாசமானது.

இயேசுகிறிஸ்துவின் போதனையில் இரண்டாம் குறிப்பு என்னவெனில், *சத்துருவை எதிர்ப்பதும் காயப்படுத்துவதும் ஊனப்படுத்துவதும் கொலைசெய்வதும் அல்ல; கண்ணுக்குக்கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒருமைல் தூரம்வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டுமைல் தூரம்போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே. உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப்*

*பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்ளுக்காகவும், உங்களைத் துன்ப படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் பரலோகத்திலிருக்க உங்கள் பிதாவுக்கு நீங்கள் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களை சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சினேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்களால்லவா? (மத் 5:38-46).*

அவருடைய அருள் மொழிக்குக் கீழ்ப்படியாமல் அவருடைய சீஷர்கள் சோதனைக்குட்பட்டபோது இயேசு அவர்களைக் கடிந்து கொண்டார்.

"அவர் எடுத்துக் கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி, தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம் பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள். அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்த படியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது; ஆண்டவரே, *எலியா செய்ததுபோல வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப் பார்த்து, நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்கள் என்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்."* (லூக்கா 9:51-56).

கெத்செமனே தோட்டத்தில் இயேசுவைக் கைது செய்தபோது, *"இயேசுவோடிருந்த ஒருவன் கை நீட்டித் தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான். அப்பொழுது, இயேசு அவனை நோக்கி, உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்."* (மத்தேயு 26:51,52).

"பிலாத்துவுக்கு எதிரில் இயேசு கொடுத்த வாக்கு மூலம் கவனிக்க வேண்டிய சொல்லாகும். *என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என்ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால், நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்க படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே. இப்படியிருக்க என் ராஜ்யம்*



*இவ்வுலகத்திற்குரியதல்ல."* (யோவான் 18:36). இங்கு இயேசு, உலகத்தின் ராஜ்யங்களுக்கும் தமது ராஜ்யத்துக்கும் வேறுபடுத்தி பேசுகிறார். அவர் தெய்வீக ராஜ்யத்தைச் சேர்ந்த கடமைகளையும் எதிர்பார்ப்பையும் உடையவராயிருந்தபடியால், அவரும் அவருடைய ஊழியர்களும் இந்த உலக ராஜ்யத்தின் ஒழுங்கு முறைமைகளுக்குக் கடன்பட்டவர்களல்ல. தமது சீஷர்கள் இன்னும் சில காலத்தில் அவர்கள் குடியிருந்த தேசம் ஆபத்தில் சிக்குண்டிருக்கும் என்று ஏற்கனவே அறிந்திருந்தார். அந்தச் சூழ்நிலையில் அவர்கள் என்ன செய்யவேண்டும்?

*"எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும் போது, அதின் அழிவு சமீபமாயுற்றென்று அறியுங்கள். அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்திலே பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள்."* (லூக்கா 21:20,21).

தமது சத்துருக்களை எதிர்க்க மாத்திரம் அல்ல, அழிக்கவும் கூடிய நிலையில் இயேசுகிறிஸ்து தமது போதனையில் உயர்ந்து காணப்பட்டார், அதன் மூலம் தம்மைப்பற்றின கிருபை நிறைந்த தீர்க்கதரிசன வசனத்தை நிறைவேற்றினார்; *அவர் நெருக்கப் பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்."* (ஏசாயா 53:7)

அவர் கைது செய்யப்பட்டபின் பிரதான ஆசாரியனால் விசாரணைக்குட் படுத்தப்பட்டபோது, *"அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள், சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்"* (மத்தேயு 26:67). *"இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகன் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான். இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால் தாகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய்? என்றார்"* (யோவான் 18:22-23). இயேசு தம் காரியத்தைச் சாதிக்கும்படி பலப்பிரயோகஞ் செய்யவில்லை.

கர்த்தருடைய போதனையில் வலியுறுத்தப்படுகிற மூன்றாவது குறிப்பு, அவர் தேசம் புறஜாதியாரால் ஆளப்பட்டு வந்தாலும், என்றுமே அவர் நீதியான காரணத்துக்கென்று தமது வல்லமையைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவர் இந்த உலகத்தின் ராஜ்யங்களையும் அதன் மகிமையையும் ஏற்றுக் கொள்ளும்படி சோதிக்கப் படுகையில், அவருடைய அதிகார வரம்பில் இருந்த லட்சகணக்கான

தூத சேனைகளைக் கொண்டு அவர் மேற்கொள்ளும் வல்லமையுடையவராக இருந்ததை பிரயோகிப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அப்படி செய்திருந்தால், அவர் தவறான வழியில் நடக்கும்படி வணங்கியிருப்பார். அது குறுகிய மனப்பான்மையுடன் வடிவமைக்கப்பட்ட ஒருயுக்தியாக இருந்திருக்கும். மறுபடியும், *''அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக் கொண்டுபோக மனதாயிருக்கிறார்கள் என்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்.''* (யோவான் 6:15). அப்போஸ்தலரின் போதனை.

அப்போஸ்தலரின் போதனையும் அவர்களது கர்த்தரின் போதனை வழியிலேயே இருந்தது. கர்த்தருடைய வாக்கு மத்தேயு 6:24ல் இருப்பது போல, இரு எஜமான்களை ஒரே வேளையில் சேவிப்பது முடியாத காரியம் என்பதை மிகத்தெளிவாக எழுதினர்: *''நான் இன்னும் மனுஷரைப் பிரியப் படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.''* (கலாத்தியர் 1:10). *''சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத் தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.'' (1 தெச 2:4). ''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.''* (1 யோவான் 2:15).

யாக்கோபின் நிருபத்தில் ஒரு அற்புதமான வேதப்பகுதி உள்ளது: *''உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினால்லலவா? நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமை உள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற் போகறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்கு சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்.''* (யாக்கோபு 4:1-3).

இங்கு சண்டைகளும் யுத்தங்களும் பற்றி விளக்கமும் எச்சரிப்பும் கொடுக்கப்படுகிறது. அந்த நிருபம் யூதர்களுக்கென்று எழுதப்பட்டது. அது எழுதப்பட்டகாலத்தில் ரோம சாம்ராஜ்யத்துக்கெதிரான பொதுஜன கொதிப்பு அதிகமாகி, ஏமாற்றமும் வன்முறைகளும் வெடித்து தேசத்தில் பரவிக்கொண்டிருந்தது.

எதிர்ப்பின் ஆவி கிளர்ச்சியடைந்தபின், வெளிநாட்டவரை எதிர்த்து போராடும் நிலை தொடர்ந்தது. இந்தப் போராட்டத்தில் யூதனுக்கு விரோதமாக மற்றொரு யூதன் கைகலக்குமளவுக்கு விரோதங்களும் சட்டவிரோத செயலும் முற்றியது.



எருசலேம்படையெடுப்பும் முற்றுகையும் சம்பவிக்கும் வரை அந்தப் போராட்டம் ஓயவில்லை. ஆனால் அன்பின் கற்பனை எல்லோரையும், சத்துருக்கள் உள்ளடக்கி சகலபேரையும் நேசிக்க வேண்டும் என்று இயேசு போதித்த கட்டளையை அடிப்படையாக கொண்டது:

*''உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதே யன்றி சபியாதிருங்கள். சந்தோஷப் படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள். ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள். மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்.... பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.... உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படி செய்வதினால், அக்கினித்தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய். நீ தீமையினால் வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.''* (ரோமர் 12:14-21).

*''ஒருவன் உங்களைச் சிறையாக்கினாலும், ஒருவன் உங்களை பட்சித்தாலும், ஒருவன் உங்களைக் கைவசப்படுத்தினாலும், ஒருவன் தன்னை உயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்தில் அறைந்தாலும் சகித்திருக்கிறீர்களே. நாங்கள் பலவீனரானது போல, எங்களுக்கு வந்த கனவீனத்தைக் குறித்துப் பேசுகிறேன்'' (2 கொரிந்தியர் 11:20-21). ''நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்வாராக.''* (1 தெசலோனிகோயர் 3:12).

**J.B. நாரீஸ்**

# பாவத்தை தவிர்த்தல்

**சிறிய தியானம்**

*தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக் கொள்ள கூடுமோ? தன்கால் சுடாமல் எவனாவது தழலின்மேல் நடக்ககூடுமோ?* அனேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாகவே சாலமோன் இந்த கேள்விகளை கேட்டு இருக்கிறார். இப்பொழுதும் மனிதர் பாவத்திற்க்கு எவ்வளவு அருகில் செல்ல முயன்று தங்கள் முன்னோர்களை சுட்ட நெருப்புத்தழல் தங்களை சுடவிடாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றனர்.

ஒரு பணக்காரர் தனக்காக ஒருவாகன ஓட்டுனரை (டிரைவர்) தேர்ந்தெடுக்க

நடத்திய சோதனை (இன்டர்வியூ)யை குறித்த ஒரு கதையை நான் நினைத்துபார்க்க வேண்டியுள்ளது. அவர் ஒவ்வொருவரையும் கேட்ட ஒரு கேள்வி என்னவென்றால் அவர்கள் ஒரு மலையின் செங்குத்தான சரிவின் ஓரத்தில் கீழேவிழாமல் வண்டியை எவ்வளவு அருகில் ஓட்டிச் செல்லக்கூடும் என்பதாகும். அவர்களில் ஒருவரை தவிர மற்ற அனைவரும் தாங்கள் மற்றவர்களை விடமிஞ்சினவர்கள் எனகாண்பிக்கும் படி சரிவின் எவ்வளவு அருகில் ஓட்ட இயலும் என கூறினார். ஆனால் அந்த ஒருவர் தான் சரிவின் ஓரத்திற்க்கு அருகில் வண்டியை ஓட்டவே மாட்டேன் எனகூறினார். அவரே அந்த வேலைக்கென்று தேர்வு செய்யப்பட்டார்.

நாமும் இவ்விதமானதொரு பாதையில் வாழ்க்கையை ஓட்டுகின்றோம். இந்த குறுகிய வளைவுபாதையில் அனேக செங்குத்தான சரிவுகள் உண்டு. ஓரத்தின் எவ்வளவு அருகில் நாம் போக விரும்புகின்றோம்? தேவனுடைய ராஜ்ஜியத்தை நோக்கி செல்லும் பயணத்தின் ஆரம்பத்தில் பாவம் என்பது நம்மை மிகவும் கவர்ந்து இழுக்ககூடிய ஒன்றாகும். அதை செய்யவிரும்புவோம். ஆனால் நாம் செய்யக்கூடாது தேவனுடன் நாம் நெருங்கி இருப்பதில் வளர வளர கிறிஸ்துவின்மீதான அன்பும் நமக்குள் கொழுந்துவிட்டு எரியும் பாவத்தின் மீதான வெறுப்பு அதிகரித்து கடைசியில் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது வெறுக்கத்தக்கதாகும் இவ்விதமாக ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடம் போவது (வளர்வது) ஒரே இரவில் நடக்கும் காரியம் அல்ல. ஆனால் நாம் அந்த செங்குத்தான பாதையின் சரிவின் அருகில் வண்டியை ஓட்டும் வரை அவ்விடத்தை அடைய முடியாமல் போகும்.

எப்படி பாவம் நம்மை வலுவாக கவர்ந்து இருக்கும் இடத்தில் இருந்து அப்படி செய்யக்கூடாத இடத்திற்க்கு நாம் போகக்கூடும். நாம் எப்படி சிந்திக்கின்றோமோ அதில்பதில் உள்ளது நாம் தூய்மையான நினைவுகளை சிந்திப்போமானால் அதின் விளைவாக நமது செயல்களும் கண்டனத்துக் குறியவைகளாக இல்லாமல் இருக்கும். நாம் நமது மனதை நேர்வழியிலிருந்து விலகச் செய்து பாதையின் ஓரத்தின் அருகில் வரை சென்றால் நாமும் அச்சரிவிலிருந்து கீழேவிழுவோம்.

எவ்வளவுக்கதிகமாய் நாம் தேவனோடு இருக்கின்றோமோ அவ்வளவு நாம் பாதையின் ஓரத்தைவிட்டும், நெருப்புத்தழல் விட்டும் தூர இருப்போம். நாம் நமது சொந்த பலத்தை சார்ந்துக் கொண்டு நாமே தனியாக தேவனுடைய உதவி இன்றி செய்துவிடுவோம் என்று நினைப்போமாயின் நாம் ஒரு ஆபத்தான எல்லைக்குள் நுழைந்துக் கொண்டு இருக்கின்றோம். உண்மையிலேயே சாலமோன் ஒரு வல்லமைமிக்க, ஞானமுள்ள, தேவனால் அபரிமிதமாக ஆசீர்வதிக்கப்பட்ட அரசன். அவன் தேவனை சார்ந்துக் கொண்டிருந்த வரைக்கும் அவனால் ஞானமுள்ள தீர்மானங்களை எடுக்க முடிந்தது. அவன் புறதேசத்துப் பெண்களை



மணந்துக் கொண்டபோது அவர்கள் நினைத்தவிதமாகவே தானும் யோசிக்கதுவங்கினான். அவன் பாதையின் மிக ஓரத்தில் சென்றுவிட்டான். என்ன நடக்கின்றது என்று நினைப்பதற்க்கு முன்னரே தனக்கு காட்சி அளித்த ஜீவனுள்ளதேவனை விட்டுவிட்டு தன்னுடைய மனைவிகளின் தேவர்களை தொழுதுக்கொண்டான். அவ்விதமாக தேவன் தம்மை வெளிப்படுத்திய மேலானதொரு அனுபவத்தின் மேன்மையை நாம் பெறாவிட்டாலும், எல்லாகாலங்களிலும் உள்ளபரிசுத்தவான்களுக்கு உள்ள மேன்மை நமக்கும் உண்டு. அது என்னவெனில் நாம் நமது எல்லாகாரியங்களையும் தேவனிடம் ஜெபத்தின்மூலம் கொண்டு செல்லலாம். அவர் நம்மை விசாரிக்கின்றவர். மேலும் நமது கரங்களில் தேவனுடைய முழுமையான வெளிப்பாடு (வேதபுத்தகம்) உண்டு. இது நமக்கு முன்னர் வாழ்ந்தவர்களிடம் இல்லாத தொன்றாகும். பாதையின் ஓரத்தைவிட்டு தூரமாக நாம் இருக்கவும், நெருப்புத்தழலை வைத்துக்கொள்ளாமல் இருக்கவும்செய்ய தேவையான எல்லாஉதவிகளும் நமக்கு வேதத்தில் உண்டு, ஆனாலும் நமக்கென்று ஒரு சுயவிருப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவேளை சாலமோனைப்போல மடியிலே நெருப்பை வைத்துக் கொள்ளவும், தழலின் மேல் நடக்கவும் வேண்டுமென்று விரும்பினால் சாலமோன் வேகவைத்த அதே தழலை நாம் எதிர்பார்க்கலாம்.

இவ்வுலகத்தோடு நாம் எவ்விதத்திலாவது ஒத்துப்போய் கொண்டிருப் போமானால், கறைபடாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தை அடைவதில் வெற்றிப் பெறுவோம் என்று நம்மில் ஒருவரும் நினைக்கக்கூடாது. தேவன்மீதான நமக்குள்ள அன்பானது நம்மை சுற்றியுள்ள இவ்வுலகத்திலுள்ள தீமையை வெறுக்க செய்யவேண்டும். ஒருவேளை தீமை நமக்கு தொடர்ந்து கவர்சியூட்டுமானால் நாம் ஞானத்தோடு அதற்க்கு முதுகை காட்டவேண்டும். அதைவிட்டுவிட்டு தீமையை அணைத்துக்கொண்டு பாதையின் விளிம்பில் இருப்பதற்கான செயலை நியாயப்படுத்த கூடாது.

ஒரு சிறிய பயிற்சியை நாம் மனதில் செய்ய முயலவேண்டும். இது நம்மிடம் இல்லாதிருந்தால் நல்லது என நாம் நினைக்கும் அல்லது இந்த உலகத்தில் உண்மையிலேயே நம்மை கவர்ந்திழுக்கும் ஒரு செயலை நாம் எடுத்துக் கொள்வோம், அதை ஒரு ஜெபக்குறிப்பாக வைத்து நமக்கு அதின்மீதான இச்சையை மேற்க்கொள்ள தேவனுடைய உதவியை நாடுவோம். தேவனுடைய காரியங்களில் மனதை திருப்பி, முற்றிலுமாக அதிலிருந்து தூரவிலகினோமானால் சீக்கிரத்திலேயே நாம் ஒரு அனுபவத்திற்குள் கடந்து செல்வோம். அது நம் தனிப்பட்ட வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு அற்புதமாகும். நம்மை அறியாமலே அந்த கவர்ச்சி நீங்கிவிடும். வழக்கம் போலவே தேவனுடைய கரம் இன்றும் நமக்கு உதவதயாராக உள்ளது. முயற்ச்சி செய்து பாருங்கள்.

# என் வாழ்க்கையை மாற்றிய அந்த நாட்கள் - சகேயு

அவரைப் பற்றி அறிந்து கொள்ள எனக்கு ரொம்பவுமே ஆவல். ஒரு யூதனாக, நாங்கள் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்றும், தேவன் நம் மேசியாவை அனுப்புவாரென்றும் எனக்குத் தெரியும். ஆனால் இந்த அசாதாரணமான மனிதரைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன் - அவர் சுகமாக்கினது, அவரின் போதனை, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்று அவர் சொன்னது ஆகிய எல்லாவற்றையும் தான். இந்த மனிதன் மேசியாவா ?

மாவட்ட வரிவசூலிப்போரின் தலைவனாக அவரைப் பற்றி பல விஷயங்களைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இவைகளைக் கதைகதையாய்ச் சொல்பவர்கள் வரிகட்டவேண்டியதைக் குறித்து முறுமுறுத்தவர்கள்தாம். மக்கள் எப்போதுமே அப்படிச் செய்வதாய்த் தான் தோன்றுகிறது. வரிகட்டிக் கொண்டிருக்கும் வேளையில், அவர்களின் சிந்தனைக்குச் சவாலாய் அமைந்த உவமைகள் பற்றியும், அவர் மக்களை, குருடனான பர்திமேயுவையும், ஆட்டு வாசலண்டையிலிருந்த முடமான மனிதனையும் சுகமாக்கினது பற்றியும் அவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

எனக்கு அவர் தேவைப்பட்டார் என்பதில்லை. செல்வந்தனாக, ரோமர்களின் நண்பனாக இருந்தாலும், அவரைப் பற்றி அறிய ஆவல் மட்டும் அதிகமாயிருந்தது. ஜனக்கூட்டம் ஏன் இந்த மனிதன் பின்னால் எல்லா இடங்களுக்கும் சென்றது ? ஏன் சில மக்கள் இவரை அதிகமாய் நேசித்தார்கள் ? மற்றவர்கள் இவரை ஏன் அதிகமாய் வெறுத்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த விஷயத்தில் நானும் அவரும் ஒன்றுதான். எங்கள் மதத் தலைவர்கள், பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள், என்னை வெறுத்ததைவிட அவரை அதிகம் வெறுக்காவிடினும், அவரையும் வெறுக்கத் தான் செய்தார்கள். வரிவசூலிப்பவனை யாருக்குமே பிடிக்காது. அளவுக்கதிகமாக வரிவசூலிக்கிறோம் அல்லது வசூலித்த பணம் முழுவதையு் அதிகாரிகளிடம் கொடுத்துவிடுவதில்லை என எங்கள் மீது குற்றம் சுமத்துகிறார்கள். வசூலித்த பணம் முழுவதையும் அதிகாரிகளிடம் செலுத்திவிடாதது கொஞ்சம் அநியாயம்தான்!

## அவரை எப்படிப் பார்க்கலாம் ?

என்னுடைய பிரச்சினை என்னவென்றால், நான் குட்டையான மனிதன். வளர்ச்சியில் குறைபாடுள்ளவன். இந்த நாசரேத்தூரானாகிய இயேசு எரிகோ வழியாய் வருகிறார் எனக்கேள்விப்பட்டேன். முக்கியமானவர்கள் யாரும் அடிக்கடி எங்கள் ஊர் பக்கம் வருவதில்லை. என் ஆவலைத் தீர்த்துக்கொள்ள இது ஒரு



நல்ல தருணமாயிருந்தது. அவரைப் பற்றிக் கேட்டதெல்லாம் என் மனதை விட்டுப் போகவே இல்லை. அதோடு, சமீப காலமாக, என் வருமானத்தைப் பற்றி என் மனச்சாட்சி குத்துகிறது. (வரி வசூலிப்போரின் பிழைப்புக்கானப் பணத்தை மக்களையே கொடுக்கச் செய்வதை ரோமர்கள் அறிவார்கள்.)

அவரை நான் என் கண்ணாலேயே பார்த்தாக வேண்டும் எனத் தீர்மானித்தேன். அவரைப் பற்றிக் கேட்பது மட்டும் போதாது. அவர் முகத்தைக் காண விரும்பினேன்.

அவரைப் பார்த்துக்கொண்டிருந்த ஓராயிரம் மக்களில் பார்ப்பதற்கு வசதியான இடமாய் காட்டத்திமரத்தில் அமர்ந்திருந்த நானும் ஒருவன். நான் அந்த மரத்தில் ஏறவேண்டியதாயிருந்தது. (வரி வசூலிப்பவன் மரத்தில் ஏறி உட்கார்ந்திருப்பது மரியாதைக் குறைச்சல் தான்.) காரணம் அவரை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்பதுதான். திடீரென்று, அவர் அங்கே வந்துவிட்டார். அவர் பேசப் போகிற இடமான மைதானத்தை நோக்கிப் போவது போலிருந்தது.

## என் வீடு!

திடீரென நான் அமர்ந்திருந்த மரத்தினடியில் அவர் நின்று, மேலே நோக்கிப்பார்த்து என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். எனக்கு எப்படி இருந்திருக்குமென்று நீங்களே கற்பனை பண்ணிப் பாருங்கள். எப்படியோ, தட்டுத் தடுமாறி கீழே இறங்கி வந்தேன். மரத்தின் கிளை ஒடிந்து அவர் பாதங்களில் நான் 'பொத்' தென்று விழாதது ஆச்சரியம்தான். அப்படி விழுந்திருந்தால், நான் விழுவதற்கான சரியான இடம் தான் அது. தூசி தட்டிக்கொண்டிருக்கும்போது, அவர் அன்று என் வீட்டிற்கு வருவதாகச் சொன்னதைக் கேட்டேன்.

நான் ஆசைப்பட்டதற்கும் மேலாகவே கிடைத்துவிட்டது. மரத்தை விட்டு நான் கீழே இறங்கும் போதே என் மனதில் பலகாரியங்கள் தெளிவாகி விட்டன. அவர் மீது பட்ட என் ஒரே ஒரு பார்வை, மக்கள் மீது அவர் கொண்டிருந்த மனதுருக்கம் பற்றி நான் கேட்டது மற்றும் நம் தவறுகளுக்காக நாம் மனந்திரும்பவேண்டுமென அவர் வற்புறுத்தியது யாவுமே உண்மையெனக் கூறியது. இப்பொழுது முன்பை விடநான் ஏழைதான். ஆனால் அன்று நான் இயேசுவுடன் செலவழித்த நேரம் மற்ற பல வழிகளில் என்னைச் செல்வந்தனாக்கியது. அவர் நம் இரட்சகர் மற்றும் மேசியா என்றும், நான் இன்னும் நேர்மையுள்ளவனாகவும், மக்களைப் பராமரிப்பவனாகவும் இருக்கவேண்டுமென்றும் கற்றுக் கொண்டேன். என் பேராசை (மற்றும் பல தவறுகள்) குறித்து நான் மனந்திரும்புவதன் மூலம் நான் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கலாம் என்பதைக்காண அவர் உதவினார். என் வீட்டிற்கு இரட்சிப்பு வந்ததெனவும் நானும் கூட ஆபிரகாமின் குமாரன் எனவும் கூறினார்.

நீங்கள் ஒன்றை அறிய ஆவலுள்ளவர்களாகும் போது என்ன நடக்கும் என்பது ஆச்சரியமும் அதிசயமும் தான்!

- சிந்தியா மைல்ஸ்